**Starting time 11.37 A.M.**

# IN THE COURT OF THE SPECIAL SUB JUDGE TO DEAL WITH L.A.O.P. CASES, ARAKKONAM.

## O.S. No. 146/2019

Deposition of **D.W.1** witnesses for Plaintiff Solemnly affirmed by Tmt. S. Ranjitha, Grade-II Bench Clerk of this court, on 13.03.2026 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : பிரமிளா Husband's Name : ஜெயவேல் ஆச்சாரி

Address : எண்.179, நேரு தெரு, அன்வர்த்திகான்பேட்டை,
அரக்கோணம் தாலுக்கா.

Age : 51

**7 முதல் 12 வரை பிரதிவாதிகள் தாக்கல் செய்த மனுவின் பேரில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை** எனது அம்மாவின் அப்பா பெயர் வரதப்ப ஆச்சாரி என்றால், சரிதான். தாவா சொத்தின் நீளம், அகலம் தெரியுமா என்றால், தெரியாது. நான் எந்த வருடம் பிறந்தேன் என்றால், தெரியாது, ஆனால் எனது ஆதார் அட்டையில் 59 வயது என உள்ளது. வரதப்ப ஆச்சாரியின் மனைவி பெயர் என்னவென்றால், சாரதாம்மாள். வரதப்ப ஆச்சாரி–சாரதம்மாளுக்கு எத்தனை குழந்தைகள் என்றால், ராணி என்ற ஒரே மகள் தான் வாரிசு ஆகும். எனது தகப்பனார் பெயர் கிருஷ்ணமூர்த்தி என்றால், சரிதான். எனக்கும், எனது அப்பாவுக்கும் சுமூகமாக உறவு உள்ளது என்றால், சரிதான்.

2. குன்னத்தூரில் கிராமத்தில் தற்சமயம் நான் வசித்து வரும் வீடு எனக்கும், வரதப்ப ஆச்சாரியின் அண்ணன் நரசிம்ம ஆச்சாரிக்கும் கூரை சீட்டு பாகம் மூலம்

ஒதுக்கப்பட்டது என்றால், இரண்டு பேருக்கு மட்டும் ஒதுக்கப்படவில்லை, 4 பேருக்கும் சேர்ந்து தான் ஒதுக்கப்பட்டது.

3. எனது பாட்டி சாரதம்மாள் மற்றும் எனது அம்மா ராணியம்மாள் ஆகியோர்கள் தாவா சொத்தில் அவர்களுக்குண்டான பாகத்தை பொறுத்து ஆவண எண் 4970/1979 என்ற எண்ணில் ஒரு விடுதலைப் பத்திரம் கோவிந்தராஜ் மற்றும் சக்கரவர்த்தி என்பவர்கள் பெயரில் எழுதிக் கொடுத்துள்ளார்கள் என்றால், எனது அம்மாவும், பாட்டியும் படிப்பறிவு இல்லாததை பயன்படுத்திக் கொண்டு அந்த பத்திரத்தை மோசடியாக எழுதி வாங்கிக் கொண்டார்கள். அந்த விடுதலைப் பத்திரத்தில் எனது தகப்பனார் சாட்சி கையெழுத்து செய்துள்ளார் என்றால், அவருக்கும் படிப்பறிவு இல்லை.

4. அதேபோல் குன்னத்தூரில் கிராமத்தில் உள்ள வேறு ஒரு சொத்தை பொறுத்து எனது பாட்டி மற்றும் அம்மா பெயரில் மேற்படி கோவிந்தராஜ் மற்றும் சக்கரவர்த்தி ஆகியோர்கள் ஆவண எண் 5017/1979 என்ற எண்ணில் ஒரு விடுதலைப் பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார்கள் என்றால், அவர்களுக்கு படிப்பறிவு இல்லாததால் அந்த விவரம் எதுவும் தெரியாது.

5. சக்கரவர்த்தி ஆச்சாரியின் மற்றும் நரசிம்ம ஆச்சாரியின் வாரிசுகளும், நானும் தாவா சொத்தை அனுபவித்து வரவில்லை என்றால், சரியல்ல, வாதிகள் தான் அனுபவித்து வருகிறார்கள். இவ்வழக்கில் என் தகப்பனார் ஒரு தரப்பினராக இல்லை என்றால், சரிதான். ஆனால் அவர் வாதிகளுக்கு ஆதரவாக சாட்சியம் அளித்துள்ளார் என்றால், சரிதான். எனவே, தாவா சொத்தில் எனக்கு பாகமே இல்லை என்றால், சரியல்ல. தாவா சொத்தை கோவிந்தராஜின் வாரிசுகள் தான் அனுபவித்து வருகிறார்கள் என்றால், சரிதான். வாதிகளும், நானும் கூட்டு சேர்ந்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றும், எனவே, இவ்வழக்கை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால், சரியல்ல.

7 முதல் 12 வரை பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

1–ம் பிரதிவாதி தரப்பில் மறு விசாரணை இல்லை.

**Ending time :11.55 A.M**

Special Subordinate Judge

YUVARAJ

Digitally signed by YUVARAJ
Location: Arakkonam
Date: 2026.03.13 15:50:59 +0530